Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

3.2.2026
ஊடக வெளியீடு

பினாங்கு நீர் விநியோக நிறுவனத்திற்கு ஐக்கிய நாடுகள் தொடர்புடைய தலைமை நிர்வாக விருது

- **"Forward Faster Sustainability" தலைமை நிர்வாக அதிகாரி 2026 விருது, நிலைத்தன்மையை தனது வணிகத் திட்டத்தில் ஒருங்கிணைத்து நிறுவனத்தை சிறப்பாக முன்னெடுத்து வருவதற்காக டத்தோ' Ir.பத்மநாதன் அவர்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

- **இது ஐக்கிய நாடுகள் உலகளாவிய ஒப்பந்த வலைமைப்பு மலேசியா & புரூணை (UNGCMYB) வழங்கும் இரண்டாவது அங்கீகாரமாகும்.**

பினாங்கு, செவ்வாய், 3.2.2026: உலகின் மிகப்பெரிய அனைத்துலக நிறுவன நிலைத்தன்மை முயற்சியின் உள்ளூர் அங்கமான ஐக்கிய நாடுகள் உலகளாவிய ஒப்பந்த வலைமைப்பு மலேசியா & புரூணை (UNGCMYB) நிறுவனத்திடமிருந்து, PBAPP மற்றும் PBA ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் (PBAHB) இரண்டாவது விருதைப் பெற்றுள்ளன.

UNGCMYB "Forward Faster Sustainability" தலைமை நிர்வாக அதிகாரி 2026 விருது, PBAPP மற்றும் PBA ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் (PBAHB) நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரியான டத்தோ Ir.பத்மநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ரிம20 மில்லியன் முதல் ரிம500 மில்லியன் வரையிலான நடுத்தர அளவிலான நிறுவனப் பிரிவில், நிலைத்தன்மையை தனது வணிகத் திட்டத்தில் ஒருங்கிணைத்து நிறுவனத்தை வழிநடத்தியதற்காக இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

PBAPP மற்றும் PBAHB நிறுவனங்கள், கீழ்க்கண்ட முன்முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த விருதை வென்றுள்ளன:

1. ரிம2.1 பில்லியன் மதிப்பிலான நீர் தற்செயல் திட்டம் 2030 (WCP 2030) கீழ், பினாங்கில் நீர் விநியோக உள்கட்டமைப்பை தொடர்ந்து விரிவுபடுத்தி, பல்துறைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. சுழிய கழிவு நீர் மறுசுழற்சி திட்டம் செயல்படுத்தப்படுவதன் மூலம், சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் "supernatant water" ஐ கூடுதல் மூல நீர் ஆதாரமாக தொடர்ந்து சேகரிப்பதுடன், அந்நிலையத்தின் நீர் சுத்திகரிப்பு மீதிகளை சிமெந்து கற்கள் (cement bricks) தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருளாக மறுசுழற்சி

செய்யப்படுகிறது.

3. புக்கிட் டும்பார் நீர்த்தேக்கம் மற்றும் பம்பிங் நிலைய வளாகத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின் மூலம், மாதத்திற்கு சுமார் 200,000 kWh சூரிய ஆற்றல் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

4. எதிர்காலத்தில் பினாங்கில் மூலோபாயப் பொதுநீர் விநியோக உப்பு நீக்க (desalination) நிலையங்களை நிறுவும் சாத்தியங்களை ஆய்வு செய்யும் நோக்கில், புலாவ் அமான் முன்மாதிரி உப்பு நீக்கத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

5. பினாங்கில் உள்ள PBAPP நிறுவனத்தின் அனைத்து வசதிகளிலும், உள்நாட்டு நீர் பயன்பாடு 30 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் “பினாங்கு 2030” கொள்கையான “தேசிய ரீதியில் பிரமிக்கும், குடும்பத்தை மையமாகக் கொண்ட பசுமை மற்றும் விவேக மாநிலத்தை உருவாக்குதல்” எனும் தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவாக, நீர் பற்றாக்குறை நிலவுகின்ற மாநிலத்தில் 2030 ஆம் ஆண்டு வரை தரமான நீர் விநியோக சேவைகளை நிலைநிறுத்துவதே இந்த அனைத்து முயற்சிகளின் பிரதான நோக்கமாகும்.

"Forward Faster Sustainability" தலைமை நிர்வாக அதிகாரி விருது, சமீபத்திய மாதங்களில் பினாங்கு மற்றும் PBA குழும நிறுவனங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைக்கப்பட்ட இரண்டாவது அங்கீகாரமாகும்.

25.11.2025 அன்று, சுங்கை டுவாவில் செயல்படுத்தப்பட்ட சுழிய கழிவு நீர் மறுசுழற்சி திட்டம்; பினாங்கிற்காக ஒருவருக்கு நாளொன்றுக்கு 250 லிட்டர் (LCD) உள்நாட்டு நீர் பயன்பாட்டு இலக்கை நிர்ணயித்து ஊக்குவித்தல்; மேலும் “AAA/Stable” நிலைத்தன்மை மதிப்பீட்டுடன் ரிம5 பில்லியன் மதிப்பிலான ‘Islamic Medium-Term Notes’ திட்டத்தை அறிமுகப்படுத்துதல் ஆகிய முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டு, UNGCMYB-இன் தொடக்க ESG (சுற்றுச்சூழல், சமூக, ஆளுமை) பட்டியலில் “3-நட்சத்திர அங்கீகாரம்” பெற்றுள்ளதாக PBAHB-க்கு அறிவிக்கப்பட்டது.

பினாங்கின் நீர் விநியோக ஒருங்கிணைப்பாளராக பணியாற்றுவதில் PBAPP மற்றும் PBAHB நிலைத்தன்மையை நோக்கி அசைக்க முடியாத முயற்சியை அங்கீகரித்ததற்காக டத்தோ Ir.பத்மநாதன் UNGCMYB-க்கு நன்றித் தெரிவித்தார்.

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)

Memenuhi segala keperluan bekalan air anda

*Meeting all your water supply needs*

“2026 ஆம் ஆண்டில், 2030க்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலைத்தன்மை இலக்குகளை அடைய நாம் தீவிரமாக செயல்பட்டு வருகிறோம். அதே சமயம், 2040 நோக்கியும் திட்டமிடல் மேற்கொண்டு வருகிறோம். UNGCMYB வழங்கியுள்ள அங்கீகாரங்கள், பினாங்கு ஒரு நீர் பற்றாக்குறை கொண்ட மாநிலமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, பெரிய அளவிலும், பாரம்பரியக் கட்டமைப்புகளைத் தாண்டியும் சிந்திக்க எங்களை ஊக்குவிக்கின்றன,” என்று அவர் தெரிவித்தார்.

நன்றி

---


| | | |
|---|---|---|
| Issued by | : | Syarifah Nasywa bt Syed Feisal Barakbah<br>Corporate Communications Section |
| Email | : | comms@pba.com.my |



Dato' Ir. Pathmanathan K., CEO of PBAPP and PBA Holdings Bhd

© PBAPP 2026




The UNGCMYB "Forward Faster Sustainability" **CEO Award 2026** recognises ***Dato' Ir. Pathmanathan K., CEO of PBAPP and PBA Holdings Bhd***, for leading a mid-tier company (RM20 million - RM500 million category) that has integrated sustainability into its business strategy.

© PBAPP 2026




***Dato' Ir. Pathmanathan K., CEO of PBAPP and PBA Holdings Bhd (centre)***, with the PBAPP team at the UNGCMYB "Forward Faster Sustainability" Awards 2026 event. © PBAPP 2026